**அநுராதபுர வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 1 - 2014**

அநுராதபுர வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்- பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுர வடக்கு பகுதியில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தில் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜப்.ஜென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்.ஜென் 5,166 மில்லியன் அல்லது 75.78 சதவீதம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தெகையான ரூபா 2,789 மில்லியனிற்கு சமமான ஜப்.ஜென் 1,651 மில்லியன் அல்லது 24.22 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாரின் பொறுப்பு**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பாரத்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு

நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிசார் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

செயற்திட்டத்திற்கு சொந்தமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பௌதீக உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு நிதிப்பிரமாண இல. 756 இன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயக்குனர் சபை அளவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகளின்மை**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து மாற்றப்பட்டிருந்த ரூபா 14.8 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் பதவியணி வேதனமாக கணக்கிடப்பட்டிருந்தது. அடிப்படைச் சம்பளம், படிகள் மற்றும் கழிப்பனவுகள் போன்ற தகவல்களை உள்ளடக்கிய விரிவான பட்டியல் இன்மையால் செயற்திட்ட

பதவியணியினருக்கு செலுத்தப்பட்ட வேதனங்களின் உண்மைத்தன்மையை நியாயப்படுத்துவது சாத்தியற்றிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 5,166 | 8,726 | 290.00 | 202.18 | 246.00 | 202.18 | 246.00 |
| இலங்கை அரசாங்கம் | 1,651 | 2,789 | 73.10 | 49.56 | 60.22 | 66.72 | 81.07 |
| மொத்தம் | 6,817 | 11,515 | 363.10 | 251.74 | 306.22 | 268.90 | 327.07 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கப்பட்ட கடனின் பெறுகைகளின் 4 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால், அடுத்த 03 ஆண்டு காலத்தின் போது ஒதுக்கப்பட்ட கடன் பெறுகைகளின் 96 சதவீதத்தின் பயன்பாட்டின் சாத்தியத் தன்மை ஐயத்திற்கிடமாக இருந்தது என காட்டுகின்றது.

### 3.2. பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்த காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் எய்தலை மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு போன்ற ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி முழுமையான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டி இருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட செயலாற்றல் காலரீதியான வழியில் மதிப்பிட முடியாதிருந்ததுடன் குறைவான செயலாற்றல் நிலவியமை காரணமாக குறித்த செயற்திட்ட காலத்திற்குள் நோக்கங்களை அடைதல் முக்கியத்துவமற்றுள்ளது.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதங்களுடன் ஆண்டின் போது தொடங்கப்பட்டிருந்தது. ஆகவே, வசதிகள் தொடங்குவதற்கான வடிவமைப்புகள் மற்றும் கேள்வி ஆவணங்கள் தயாரித்தல்,

தண்ணீர் சுத்திகரிப்பு பொறிகள், நிலக்கீழ் தொட்டிகள் மற்றும் கோபுரங்கள் போன்ற ஆரம்ப வேலைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய வேலைகள் 53 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட நிலைமை அறிகையின் 2.2 ஆம் உறுப்புரையின் பிரகாரம், செயற்திட்டத்திற்கான ஆலோசனையாளர் 2013 செப்தெம்பர் மாதத்திற்கு முன்னர் தெரிவுசெய்யப்பட்டிருக்க வேண்டியிருந்தது அதேநேரம் ஆலோசனை சேவைகளிற்கான ஒப்பந்தம் 09 மாத தாமதங்களுடன் 2014 யூன் 13 இலேயே வழங்கப்பட்டிருந்தது.

**3.3. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழமையாக, செயற்திட்டத்தின் உத்தியோகத்தருக்கான வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்பட்டுள்ளதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக போதிய பதவியணியினரை செயற்திட்டம் பேணியிருந்த போதிலும் மேந்தலைச் செலவினமாக செயற்திட்டத்திடமிருந்து கணிப்பிடப்பட்ட சம்பள கிரயத்தின் 20 சதவீதம் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட மேந்தலைச் செலவினம் ரூபா 517,193 ஆக இருந்தது.

(ஆ) 2014 ஆகஸ்ட் 22 இலிருந்து 24 வரை கொழும்பில் நடைபெற்ற சமுதாயம் மற்றும் தண்ணீர் சேவைகள் மீதான மூன்றாவது சர்வதேச கருத்தரங்கான செலவீனங்கள் ரூபா செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத போதும் செயற்திட்டம் 2 மில்லியனை செலவழித்திருந்தது. ஏற்பட்ட செலவினம் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.